புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

# பௌராவின் வீரநிலைக் கோட்பாட்டு அடிப்படையில் தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களில் வெளிப்படும் பெண்களின் வீரம்

முனைவர் ந.சோழன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி)
திருப்பத்தூர்- 635 601.

**முன்னுரை**

எந்த ஒரு மனிதனும் சமூகத்தில் உயர்ந்த இடம் பெறுவதையே தன்னுடைய உள்ளார்ந்த நோக்கமாகக் கொண்டிருக்கின்றான். அந்த வகையில் கல்வி, செல்வம், வீரம் போன்றவற்றின் வாயிலாக மனிதன் பிறரிடம் இருந்து வேறுபட்டு உயர்ந்து நிற்கின்றான். அதிலும் குறிப்பாகத் தொடக்க காலச் சமூகத்தில் மனிதர்களை அச்சுறுத்தும் விலங்குகளிடமிருந்தும் பகைவர்களிடமிருந்தும் காத்த வீரனையே மக்கள் தங்கள் நாயகனாகக் கொண்டாடத் தொடங்கினர். எனவே தான் மனித சமூகத்தில் வீரத்திற்கெனத் தனித்த இடம் தரப்படுகின்றது. மேலும், தொடக்க காலச் சமூகத்தில் வீரமுடையோரே மக்களை வழிநடத்தினர். இதனைக் கருத்தில் கொண்டே ஒரு சமூகத்தின் கலாச்சாரம் பற்றிய ஆய்விற்கு வீரனைப் பற்றிய ஆய்வு தேவை (Stuart H. Blackburn, 1978: p. 131.) என ஸ்டுவர்ட் பிளாக்பென் கூறுகின்றார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தரும் ஒப்பிலக்கிய ஆய்வாளருமான சி.எம்.பௌரா(C.M.Bowra), கிரேக்கக் கவி ஹோமரின் காவியங்களான இலியட், ஒடிசியினை ஆய்விற்கு உட்படுத்தும்போது பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டார். அச்சிக்கல்களுக்கான விடையை உலகின் பல்வேறு பகுதிகளிலும் வழங்கிவரக் கூடிய வீரநிலை இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வதன் வழிக் கண்டுணரலாம் என்ற முடிவிற்கு வந்தார். அதன்படி ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கக் கண்டங்களிலுள்ள பல்வேறு நாடுகளின் வீரநிலை இலக்கியங்களை ஆய்விற்கு உட்படுத்தி வீரநிலைக் கவிதையின் பல்வேறு நுட்பங்களை விளங்கிக் கொண்டார். அந்த ஆய்வின் கருத்துக்களைத் தனது வீரநிலைக் கவிதை (Heroic Poetry) என்ற நூலில் விரிவாகவும் தெளிவாகவும் முன்வைத்துள்ளார்.

பௌராவிற்கு முன்பேயும் எச்.எம். சாட்விக், என்.கே. சித்தாந்தா போன்றோர் வீரநிலைக் கவிதை குறித்துப் பேசியுள்ளனர். எச்.எம். சாட்விக், கிரேக்க மற்றும் டியூட்டானிய வீரநிலை இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்ந்து அவற்றின் வீரநிலைப் பண்புகள் குறித்துத் தனது வீரநிலைக் காலம் (The Heroic Age) என்ற நூலில் பேசியுள்ளார். எச்.எம். சாட்விக்கின் மேற்பார்வையில் தன்னுடைய ஆய்வினைச் செய்த என்.கே. சித்தாந்தா, இராமாயணம், மகாபாரதம் ஆகிய இந்தியாவின் இருபெருங் காவியங்களை ஐரோப்பிய வீரநிலைப் பாடல்களோடு ஒப்பிட்டு ஆய்ந்து அவற்றின் வீரப்பண்புகளைத் தனது இந்தியாவின் வீரநிலைக் காலம் ( The Heroic Age of India) என்ற நூலில் முன்வைத்துள்ளார். தமிழில் கைலாசபதி சங்க இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்ந்து தமிழ் வீரநிலைக் கவிதை என்ற ஆய்வு

நூலினைப் படைத்துள்ளார். அவர் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுள் தனது ஆய்வினை நிகழ்த்தியுள்ளார். மேற்கண்ட ஆய்வுகளிலிருந்து, உலகின் பல்வேறு பகுதிகளிலும் வழங்கிவரக் கூடிய வீரநிலைப் பாடல்களைத் தரவுகளாக எடுத்துக்கொண்டு ஒப்பிட்டதோடு அவற்றின் தோற்றத்தினைக் கோட்பாட்டு நிலையில் விளக்கியுள்ளதன்வழிப் பௌரா வேறுபட்டு நிற்கின்றார். உலக இலக்கியங்களை ஆய்ந்து உருவாக்கப்பட்ட பௌராவின் கோட்பாட்டினைப் பல்வேறு ஆய்வுக் களங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதும் உலகளாவிய பார்வையில் படைக்கப்பட்டதுமான தமிழ் இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்குவது சாலச் சிறந்ததாக அமையும்.

**கதைப்பாடலும் புராணமும்**

மனிதனின் ஆழ்மனதுள் பதிந்துள்ள புதைபொருள்கள் பலவாகும். அவற்றுள் காலங்காலமாகக் கையளிக்கப்பட்டு வருகின்ற பாடல், விடுகதை, பழமொழி, கதைப்பாடல் போன்றவையும் அடங்கும். அவற்றுள் கதைப்பாடல்கள், நெடுங்கதையாகவும் மக்களின் முன் எடுத்துரைக்கப்படுவதாகவும் வீரத்தை மையமிட்டதாகவும் பெரும்பாலானவை அமைகின்றன. மரபார்ந்த கதைகளும் பாடல்களும் தொல்பழங்கால மனித இயல்பைப் பிரதிபலிக்க வல்லன. மேற்கண்ட கதைகள், பாடல்கள் போன்றவற்றில் தெய்வச் செயல்களும் அவர்களால் நடைபெறுகின்ற அற்புதச் செயல்களும் போற்றிப் புகழப்பட்டால் அவற்றைப் புராணச் சார்புடையன என வழங்கும் வழக்கம் உள்ளது. இப்புராணம் என்ற சொல்லானது வடமொழியின்கண் வழங்கும் 'புராணா' என்ற சொல்லிருந்து வருவிக்கப்பட்ட சொல்லாகும். புராணம் என்பதற்குப் பலரும் பலவிதமாகப் பொருள் கூறினாலும் நாட்டுப்புறவியல், புராணவியல் மற்றும் பழமரபுக்கதை குறித்த தரப்படுத்தப்பட்ட அகராதியானது புராணம் என்பதைக் குறித்து 'பிரபஞ்சப் படைப்பு மற்றும் மீவியல்பு மரபுகள் குறித்த மக்களின் சிந்தனைகளோடு அவர்களின் தெய்வங்கள், வீரர்கள், கலாச்சார அடையாளங்கள் மற்றும் சமய நம்பிக்கைகள் ஆகியவற்றினைக் குறித்த விளக்கமாகவும் முன்பொரு காலத்தில் உண்மையில் நிகழ்ந்ததாகவும் கதை வடிவில் விவரிக்கப்படுவதனைப் புராணம் என்கின்றது. மேலும் இப்புராணங்கள் மனிதன், விலங்குகள் மற்றும் இயற்கையின் தோற்றப் பின்புலத்தினைக் குறித்தும் பேசுகின்றது. தோற்றப் பின்புலத்தைப் பேசுபவை எல்லாம் புராணமாகிவிடாது. எத்தோற்றப் புராணங்களில் சமயப் பின்னணியும் அவற்றில் இடம்பெறும் முதன்மைப் பாத்திரங்கள் கடவுளாகவும் அமைகின்றனவோ அவையே புராணம் எனப்படும். அவ்வாறில்லையேல் அவை நாட்டுப்புறக் கதைகளாகக் கருதப்படும்' (Maria Leach(Ed), 1949,P.778.) என விளக்கிச் சென்றுள்ளமை சிறப்பானதாக அமைகின்றது.

வாய்மொழி இலக்கியங்களையும் தரவுகளாக எடுத்துக் கொண்டு கோட்பாட்டினை உருவாக்கியுள்ள பௌராவின் வீரநிலைக் கோட்பாடு பல தளங்களுள் விரிந்து சென்று ஆராயும் முகமாக அமைகின்றது. ஆகையால் இக்கட்டுரையானது சமூக இயங்குதளத்தில் சரிபாதியினைக் கொண்டுள்ள பெண்களின் வீரம் குறித்து மட்டும் பௌராவின் கருத்துகளின் அடிப்படையில் வாய்மொழி இலக்கியமான தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களாகிய முப்புராதி அம்மன் கதை, பிரமசக்தி அம்மன் கதை, பழையனூர் நீலி கதை ஆகியவற்றுள் மட்டும் எல்லை கருதி ஆய்வினை மேற்கொள்கின்றது.

**முச்சமூகப் பிரிவுகளும் பெண்களின் வீரமும்**

வீரம் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று. அது ஆண்களுக்கு மட்டுமே உரியது அன்று. பெண்கள் மற்றும் அவர்களின் வீரம் குறித்து விளக்க வரும் பௌரா அவற்றை மூன்று சமூகப் பிரிவுகளின் அடிப்படையில் விளக்குகின்றார். தொல்நிலை (Primitive), பாட்டாளி வர்க்கம் (Proletarian) மற்றும் உயர்குடி வர்க்கம் (Aristocratic) ஆகியவையே அம்மூன்று சமூகப்பிரிவுகள். தொல்நிலைச் சமூகப் பாடல்களில் பெண்கள் குடும்பத்தில் முக்கியமானவளாகவும் விருந்தினரை உபசரிப்பவளாகவும் வருவதுரைப்பவளாகவும் மந்திரவாதியாகவும் அறிவுரை கூறுபவளாகவும் விளங்குகின்றாள். மேலும் போர் என்று வரும்போது ஆணுக்கு நிகராகச் சண்டையிடக் கூடியவளாகவும் விளங்குகின்றாள். எடுத்துக்காட்டாக, கிர்கிஸ்தானில் வழங்கி வரக்கூடிய மாபெரும் காவியம் மனாஸ் (Manas). இக்காவியம் தந்தை பின் அவனது மகன் எனப் பரம்பரையாக நீண்டு செல்லக்கூடிய கதையமைப்பினைப் பெற்றுள்ளது. இக்காவியத் தலைவனான மனாசின் இறப்பிற்குப் பிறகு அவன்

மகனான செமடாய் (Sematai) தலைமைப் பொறுப்பிற்கு வருகின்றான். அவன் எதிரிகளுடனான சண்டையில் இரு கல்முக் (Kalmuck) வீரர்களால் கொல்லப்படுகின்றான். இதனைக் கேள்வியுற்ற செமடாயின் தாயான கனிகை (Kanykai) கடுங்கோபம் கொண்டு பழிவாங்கக் கிளம்புகின்றாள். எதிரிகளுடன் நேருக்குநேர் நின்று கடுஞ்சண்டை புரிகின்றாள். சண்டையின் முடிவில் எதிரிகள் கனிகையிடம் தோற்று மன்னிப்பு வேண்டுகின்றனர். ஆனால் கனிகை தன் மகனைக் கொன்றவர்களின் இரத்தத்தைக் குடிப்பதன் மூலமே தனது பழிவாங்கும் எண்ணம் முழுமையுறும் எனக் கூறி அவர்களைக் கொடூரமாகக் கொல்கின்றாள்.

பாட்டாளி வர்க்கச் சமூகப் பாடல்களில் பெண்கள் தொல்நிலையில் பெற்றிருந்த வருவதுரைத்தல், மந்திரவாதி போன்ற பண்புகள் மறுக்கப்படத் தொடங்குகின்றன. குறிப்பாக, ஆணுக்கு நிகராகச் சண்டையிடுதல் என்ற பெண்ணின் வீரம் பேசப்படாமல் இல்லாளாகவும் விருந்தோம்புபவளாகவும் மட்டுமே அவளது இருப்பு கட்டமைக்கப்படத் தொடங்குகின்றது. எனினும் இச்சமூகப் பிரிவிலும் பெண்களின் பெருவீரம் விதிவிலக்காகப் பேசப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, பல்கேரியாவில் ஒரு பாடல் வழங்கி வருகின்றது. அப்பாடலில் கேதரின் II (catherine II) என்பவள் அப்பகுதியை ஆண்டு வருகின்ற சுல்தானுக்குக் கட்டுப்பட மறுக்கின்றாள். இதனால் சுல்தான் எழுபது வீரர்களை அனுப்பி அவளைச் சிறைப்பிடித்து வரச் சொல்கின்றான். கேதரின், சுல்தான் அனுப்பிய எழுபது வீரர்களுடன் மூன்று நாட்கள் இரவும் பகலும் கடும்போர் புரிந்து வெல்கின்றாள். வென்றதன்பின் எழுபது வீரர்களின் தலையையும் வெட்டிச் சுல்தானுக்கு அனுப்பி இன்னும் இது போன்று வீரர்களை அனுப்பி வைக்குமாறு வீரவுரை மொழிகின்றாள்.

இதற்கடுத்த நிலையில் வீரநிலைப் பாடல்கள் உயர்குடி வர்க்கப் பிரிவிற்கு மாற்றமடைகின்றன. அவ்வாறு மாற்றமடையும்போது பெண்கள் குறித்த முந்தைய மதிப்பிலும் மாற்றம் ஏற்படத் தொடங்குகின்றது. இவ்வர்க்கப் பெண்கள் பாட்டாளி வர்க்கச் சமூகப் பெண்களைவிடப் பயபக்தி மிக்கவர்களாகப் புனையப்படுகின்றனர். இவர்கள் வருவதுரைப்பவளாகவும் விருந்தோம்புபவளாகவும் கட்டமைக்கப்படுகின்றனர். எனினும் இவ்வர்க்கப் பிரிவிலும் தொல்நிலையில் பெண்களுக்கு வழங்கப்பட்டதனைப் போன்று ஆண்களுக்கு நிகராக நேர்எதிர் நின்று போராடுகின்ற பண்பும் வழங்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஜெர்மானிய வீரக்கவிதையில் இரு சமூகப் பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட போரினைக் குறித்த பாடல் (The battle of the Goths and the Huns) ஒன்று வழங்கி வருகின்றது. இப்பாடலில் கோதிக் மரபினைச் சேர்ந்த வீரப்பெண்மணியான கெர்வர் (Hervor) என்பவள் தன் சகோதரனான அகன்டிருக்காக (Angantyr) வேண்டிக் காவல் பணியில் ஈடுபடுகின்றாள். அப்போது எதிரிகளான கன்கள் (Huns) படையெடுத்து வருகின்றனர். அதனைக் கண்ணுற்ற கெர்வர் படையினைத் திரட்டிக் கொண்டு சென்று எதிர்த்துப் போரிடுகின்றாள். கடும்போரின் முடிவில் போர்க்களத்திலேயே உயிர் துறக்கின்றாள். மேலும் இம்முப்பிரிவுகள் முற்றிலும் ஒன்றோடொன்று தனித்தவை அல்ல. ஒரு குறிப்பிட்ட நாட்டின் பாடல்களுக்குள்ளேயே இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புபட்டுக் காணப்படவும் வாய்ப்புண்டு. இம்மூன்று பிரிவுகள் மட்டுமே இறுதியானவையும் அல்ல. ஒரு வீரப்பொருண்மை மூன்று தளங்களில் எவ்விதம் வெளிப்படுகின்றது என்பதைக் காணவே இப்பகுப்புமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறுகின்றார் பௌரா (C.M. Bowra, Heroic Poetry, pp. 480 – 493.). மேற்கண்ட மூன்று வர்க்கப் பிரிவுகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது தொல்நிலையிலிருந்த பெண்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிபோகின்ற தன்மையினை விளங்கிக்கொள்ள முடிகின்றது. எனினும் பெண்களின் வீரம் குறித்து நோக்கும்போது அவர்கள் போரின்போது ஆண்களுடன் நேருக்குநேர் எதிர்நின்று போராடுகின்ற பண்பானது முற்றிலும் மறுக்கப்படவில்லை என்பதனை உய்த்துணர முடிகின்றது. இனி, தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களில் இடம்பெறுகின்ற பெண்களின் வீரத்தினைப் பௌராவின் கருத்துகளோடு ஒப்பிட்டு ஆய்வோம்.

**முப்புராதி அம்மன் கதைப்பாடல்**

முப்புராதி அம்மன் கதைப்பாடலில் ஆணொருவனால் வெல்ல முடியாதபடியான வரம் ஒன்றினைப் பெற்றுள்ளவனான தாருகனை அழிக்க வேண்டிச் சிவன் காளியை அனுப்புகின்றார். ஆனால் சேலை கட்டிய பெண்ணுடன் ஆண் மகனாகிய தான் போர் புரிய மாட்டேன் எனத் தாருகன் கூறுகின்றான். இதனை,

'மாரிட்ட பெண்ணோட யாண்பிள்ளை நான் போகப்போமோ

வாதுக்குப் போர் செய்ய வாரும் தளகத்தமாரே’ (மு.க.1147)

என்ற அடியானது விளக்கி நிற்கின்றது. இறுதியில் தாருகனைக் காளி தன் மந்திர சக்தியால் வெல்கின்றாள். தாருகன் ஆணொருவனால் தான் வெல்லப்படக் கூடாது என வரம் வாங்குவதே எந்தப் பெண்ணிற்கும் தன்னைத் தோற்கடிக்கும் வலு இல்லை என்ற எண்ணத்தினால்தான். முஸ்லிம் படைப்போர் இலக்கியங்களான சல்கா படைப்போர் மற்றும் மலுக்குமுலுக்கின் படைப்போர்களில் பெண்களுடன் போர் புரிய அலியார் மறுப்பதற்கும் அடிப்படைக் காரணம் மேற்கண்ட எண்ணமே (திருமலர் எம்.எம்.மீரான்பிள்ளை, 2011, ப.203) என்பது உய்த்துணரத்தக்கது.

**பிரமசக்தியம்மன் கதை**

பிரமசக்தியம்மன் கதையில் தனக்காகக் கொண்டுவரப்பட்ட பொன்னரிய மாலையினைத் தேவர்களிடமிருந்து பறித்துச் சென்ற சண்டமுண்டனை அழிப்பதற்குப் பிரமசக்தியினைப் படைக்கின்றார் சிவன். ஆனால் ஆணாகிய சண்டமுண்டனுன் தன்னால் போர் புரிய இயலாது. எனவே தனக்கொரு தம்பியாகப் பலவேசமுத்துவைப் படைத்தருள வேண்டும் என்கிறாள் பிரமசக்தி. இதனை,

‘கி(கெ)வன மோடிதான் ஆணல்லோ சிவனாரே

கிளி மொழி யாள்நான் பெண்ணல்லோ சிவனாரே

ஆண்பிள்ளை யோடேநானும் பொருதிட

அரனே உமக்குத் தான்சம்மத மாச்சுதோ’ (பி.க.700-703)

என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன. பிரமசக்தி இவ்வாறு சொல்வதைக் கேட்டு மகிழும் சிவன் அவள் வேண்டுகோளின்படியே தம்பியையும் படைக்கின்றார். அவன் சண்டமுண்டனுடன் போரிட்டு வெல்கின்றான். இங்குப் பெண்ணுக்கு ஆணோடு சரிக்குச் சமமாகப் போர் புரியும் வீரம் என்பது பெண் குரலின் வாயிலாகவே மறுக்கப்படுவது நோக்கத்தக்கது.

**பழையனூர் நீலி கதை**

பழையனூர் நீலி கதையில் முற்பிறவியில் தன்னைக் கொன்ற அந்தணனைப் பழிவாங்க மறுபிறவி எடுத்துச்செல்லும் நீலி அவனை நேருக்குநேர் எதிர்த்து நின்று உடல் வலிமையினால் கொல்லாமல் தன்னுடைய மந்திர வலிமையால் கொன்று பழிவாங்குகின்றாள்.

மேற்கண்ட புராணக் கதைப்பாடல்களில், தாருகன், தன்னை எதிர்த்து நேருக்கு நேர் போரிடப் பெண்ணுக்குத் தகுதி இல்லை எனக் கூறி முப்புராதியுடன் போர் செய்ய மறுக்கின்றான். எனினும் முப்புராதி மந்திரத்தினைப் பயன்படுத்தி அவனை வெல்கின்றாள். பிரமசக்தியம்மன் கதையில் பிரமசக்தி, தான் ஆணோடு நேருக்குநேர் போர் புரியத் தகுதியற்றவள் எனக் கூறிக் கொள்கின்றாள். பழையனூர் நீலியோ தன்னைக் கொன்றவனைப் பழிவாங்க மந்திரத்தினையே பயன்படுத்துகின்றாள். பிரம சக்தியம்மன் கதையின்வழி, பெண்கள் ஆண்களோடு நேருக்குநேர் போர் புரியத் தகுதியற்றவர்கள் என்பதும், முப்புராதியம்மன் மற்றும் பழையனூர் நீலி கதைகளின்வழியே, பெண்கள் ஆண்களை எதிர்த்து நேருக்குநேர் போரிட்டாலும் அவர்களால் உடல் வலிமையினைப் பயன்படுத்தி வெல்ல முடியாது. மந்திரவலிமையினாலேயே வெல்ல முடியும் என்பதும் பெறப்படுகின்றது. பௌராவின் மூன்று வர்க்கப் பிரிவுகளிலும் பெண்கள், ஆண்களோடு நேருக்குநேர் எதிர்நின்று போரிடுகின்ற பண்பினைப் பெற்றுள்ளனர். ஆனால் தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களில் பெண்களுக்கு அப்பண்பு மறுக்கப்படுகின்றமையை உய்த்துணரமுடிகின்றது.

**முடிவுரை**

இதுவரை நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களில் பெண்களின் வீரமானது பௌராவின் கருத்துகளுக்கு மாறாக ஆண்களோடு நேருக்குநேர் எதிர்த்துப் போர் புரிகின்ற இயல்பற்றதாக அமைகின்றமையினை உணர முடிகின்றது. இவ்விடத்தில் பெண்களுக்கு ஆண்களை எதிர்த்துப் போரிடுகின்ற வீரப்பண்பு ஏன் மறுக்கப்படுகின்றது அல்லது இருட்டடிப்பு செய்யப்படுகின்றது என்பதைக் குறித்துச் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. தமிழ் இலக்கியப் பரப்பில் கதைப்பாடல் என்ற இலக்கிய வகை பிற்காலத்தில் தோன்றிய ஒன்றாகும். அவ்வகையில் தமிழ் இலக்கியம் நீண்ட நெடிய மரபினைக் கொண்டது. அம்மரபின் தொடக்க நிலையினைச் சங்க இலக்கியங்களில் காணலாம். அவற்றுள் பெண்கள் ஈன்று புறந்தருபவளாகவும் இல்லாளாகவும் விருந்தோம்புபவளாகவும் மட்டுமே படைக்கப்பட்டுள்ளனர். எந்த ஓரிடத்திலும் ஆண்களோடு பெண்கள் நேருக்கு நேர் நின்று போரிட்டதற்கான குறிப்பில்லை. எனினும் போர்ப்பாசறையில் குற்றேவல்

பணிகளுக்காக இடம் பெற்றுள்ளமையைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக உணர முடிகின்றது. கணவனைப் போரில் இழந்த பின்பு தான் செல்லாமல் தனது பால் மணம் மாறாதா பாலகனையே போருக்கு அனுப்ப வேண்டிய சமூகச் சூழல் அது. ஆனால் போருக்குப் பின்பு போர்க்களத்திற்குச் சென்று இறந்த தன் உறவுகளைத் தேடியமைக்குச் சான்றுகள் காணப்படுகின்றன. மேலும், வேற்று நாட்டின்மீது போர் தொடுக்கப் போகும் பாண்டிய மன்னன் ஒருவன் பெண்கள் உள்ளிட்ட ஒரு பிரிவினரைச் சுட்டி அவர்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு பணிப்பதைப் புறநானூற்றுப் பாடலொன்று சுட்டி நிற்கின்றமையும் நோக்கத்தக்கது (புறநானூறு., பாடல் எண். 9: 1-6). சங்க இலக்கியத்துள் வீரர்களுக்காக நடப்படும் நடுகல் சான்றுகளிலும் பெண்களின் வீரம் குறித்த பதிவெதுவும் காணக்கிடைக்கவில்லை சங்க இலக்கியத்திற்கு அடுத்த நிலையான காப்பியக் காலத்திலும் பெண்களுக்கு மேற்கண்ட வீரம் என்பது மறுக்கப்பட்டே வந்துள்ளது. தன் கணவனின் கொலைக்காகப் பழிவாங்கச் செல்லும் கண்ணகி, தனது உடல் வலிமையால் போராடாமல் மீவியல்புக் கூறுகளின் துணையுடனேயே பழிவாங்குகின்றமையும் மேற்கண்ட கருத்தினை வலுப்படுத்தி நிற்கின்றது. எனவே இத்தகைய மரபின் வழிவந்த தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களும் மேற்கண்ட மரபினையே பின்பற்றி நிற்பதால் பெண்களுக்கு ஆணை எதிர்த்துப் போரிடுகின்ற வீரப் பண்பினை மறுதலிக்கின்றது என்பதனை உய்த்துணரமுடிகின்றது. இதுவரை நாம் இலக்கியச் சான்றுகளின்வழி, பெண்களின் வீரம் குறித்து ஆய்வு செய்தோம். எனினும் புறச் சான்றுகளான கல்வெட்டு, நாணயம், செப்பேடு போன்றவற்றிலிருந்து நமக்குக் கிடைக்கும் சான்றுகளின் வழியாக மட்டுமே உண்மையிலேயே தமிழ்ச் சமூகத்தில் பெண்களுக்கு வீரம் என்பது மறுக்கப்பட்டுள்ளதா அல்லது மறைக்கப்பட்டுள்ளதா என்பது தெரியவரும்.

**துணை நூல்கள்**


1. சு. தாமரைப் பாண்டியன், 2014, கதைப்பாடல் சுவடித் திரட்டும் பதிப்பும், சென்னை, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.
2. திருமலர் எம்.எம்.மீரான்பிள்ளை, 2011,முஸ்லிம் தமிழ் வீரக்கவிதை ஆய்வு, சென்னை, சாதனை வெளியீடு.
3. புறநானூறு– 1, சு.துரைசாமிப்பிள்ளை., (உ.ஆ.), 2008, சென்னை, தமிழ்மண் அறக்கட்டளை.
4. C.M.Bowra., 1952, Heroic Poetry, London, Macmillan & co. Ltd.
5. Maria Leach (Ed), 1949, Standard Dictionary of Folklore, Mythology and Legend, Newyork, Funk & Wagnalls.
6. Stuart H. Blackburn, 1978, ‘The Folk Hero and class Interests in Tamil Heroic Ballads’ , Asian Folklore Studies, Vol. 37, No. 1.